Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண். 49
போன் 389

மலர் 9
இதழ் 303
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 16 ஜ. ஆகிர். 27 திங்கட்கிழமை [2-10-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# சிக்கிம் திபேத் எல்லையில் மீண்டும் மோதல்

## சீனர்கள் முதலில் சுட்டதாக இந்தியா புகார்

புதுடில்லி, அக. 1

சிக்கிம்-திபேத் எல்லையில் இன்று மீண்டும் சின-இந்தியத் துருப்புக்களுக்கிடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

சிக்கிம்-திபேத் எல்லையில் நாத்துலாவுக்கு அருகே சோலா என்ற இடத்தில் இன்று காலை 9 மணிக்கு சீனத் துருப்புக்கள் இந்தியத் துருப்புக்களை நோக்கிச் சுட்டதாகவும், இந்தியத் துருப்புக்கள் திருப்பிச் சுட்டதாகவும் புதுடில்லியில் இன்று அறிவிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகம் விட்டுவிட்டு நடைபெறுவதாகச் செய்தி கிடைத்த போதிலும் சேதங்கள் பற்றி ஒன்றும்விபரம்தெரியவில்லை இருதரப்பிலும் கணிசமான சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்றுகருதப்படுகிறது. சீனர்கள் ஆத்திரமூட்டப் படாத நிலையில்தான் சுடத் தொடங்கினார்கள் என்று இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## 150 இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் கைது

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்றையதினம் மட்டும் யாழ்ப்பாணம் நகர எல்லைக்குள் சுமார் 150 க்கும் மேற்பட்ட இளைஞர்களை பொலிஸார் கைது செய்தனர்.

இருவராகவும், போக்குவரத்துச்சட்டத்தை மீறியும் சைக்கிளில் சவாரி செய்தோரே கைதுசெய்யப்பட்ட வாலிபர்களாவர். இவர்கள் மீது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலிஸார் முடிவுசெய்துள்ளதாகத் தெரிகின்றது. கைதுசெய்யப்பட்டவர்களிலுள்ள மாணவர்கள் பற்றிய பூரண விபரங்களும் அவ்வப்பாடசாலை அதிபர்களுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படவிருக்கின்றது.

இம்மாதம்வரை இந்நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். வீதி ஒழுங்குகளை மீறியும், குடிபோதையிலும் வாகனங்களைச் செலுத்தும் மோட்டார் வண்டிச்சாரதிகள், இ. போ. ச. பஸ் சாரதிகள் டாக்சிச் சாரதிகள் மீதும் பொலிஸார் தீவிர கண்காணிப்புச் செலுத்துவார்கள். (ந. நி.)



### இன்று காந்தீ ஜெயந்தீ

(2-ம் 3-ம் பக்கங்கள் பார்க்க)

### இன்று

காந்தி ஜயந்தியை மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தினர் இன்று கொண்டாடவிருக்கின்றனர். பக்திப் பாடல்களும் சொற்பொழிவுகளும் நிகழ்ச்சிகளில் இடம் பெறும்.

## பட்டதாரி மாணவருக்கு கடன் வசதி

### இலகுவில் கிடைக்க அமைச்சர்முயற்சி

கொழும்பு, ஞாயிறு

வசதி குறைந்த பட்டதாரி மாணவர்கள் கல்வி கற்பதற்கு இலகுவில் கடன்பெறுவதற்கான வழிவகைகளை கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை திறைசேரியுடன் தொடர்பு கொண்டு ஆலோசனைசெய்து வருவதாக அறியப்படுகிறது தற்போது மக்கள் வங்கி மூலம் இந்த மாணவர்கள் கடன்பெறக்கூடியதாக இருந்தபோதும் இரு சாட்சிகளைத் தேடிப்பிடிக்கும் விஷயத்தில் அவர்கள் கஷ்டமடையவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட புகாரைத் தொடர்ந்தே அமைச்சர் இவ்வித நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## சீனாவின் 18-வது வருடாந்த தேசிய விழா

### சோவியத் மங்கோலிய பிரதிநிதிகள் வெளிநடப்பு

ஹொங்கொங், அக். 1

இன்று பீகிங்கில் நடைபெற்ற சீனக்குடியரசின் 18-வது வருடாந்த விழாவிலிருந்து சோவியத் யூனியன் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மங்கோலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த ராஜீய பிரதிநிதிகள் வெளிநடப்பு செய்தார்கள்.

வழக்கமாக இவ்விழாவில் முந்திய வருடங்களில்கலந்து கொள்ளும் சீன அதிபர் லியுஷா-ஷியும் அவருடைய சகாக்களும் இன்று கலந்து

[6-ம் பக்கம் பார்க்க]

### புதிய சுப்ரீண்டன்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி கள்ளக்குடியேற்றத் தடுப்புப் பகுதி சுப்ரீண்டனுக குருநாகல் பகுதி பொலிஸ் சுப்ரீண்டனான திரு. ஏ. சி. லோரன்ஸ் அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் கடமையாற்றுவார். இப்போது இங்கு கடமையாற்றும் திரு. லயனல் சேனநாயக்கா பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உதவியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். [ந. நி.

நாவலர் சந்தி படுகொலை வழக்கு

# முதலாம் எதிரிக்கு மரணதண்டனை

## 2-ம், 3-ம் எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், திங்கள்

நாவலர் சந்தி படுகொலை வழக்கில் முதலாம் எதிரியான சீனி இரத்தினத்துக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாம் மூன்றும் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் திகதி காங்கேசன்துறை நாவலர் சந்தியில் சுப்பிரமணியம் தெய்வேந்திரம் என்ற வாலிபரைச் சுட்டுக் கொலைசெய்ததாக சீனு இரத்தினம், நடராசா சுப்பிரமணியம், முருகேசு சண்முகம் ஆகிய மூவர் மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் பின்னர் ஜூரி சபையினர் சுமார் ஒரு மணிநேரம் மந்திராலோசனை நடத்திய பின்னர் முதலாம் எதிரியை 5 ஜூரிகள் குற்றவாளிகள் எனத் தீர்மானித்துள்ளதாகவும், இரண்டாம் மூன்றும் எதிரிகளை ஏகமனதாக சுற்றவாளிகளாகக் காண்பதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் முதலாம் எதிரிக்கு மரணதண்டனைவிதித்து இரண்டாம் மூன்றும் எதிரிகளை விடுதலை செய்தார்.

நேற்று நண்பகல் சுமார் 12 மணிக்கு முதலாம் எதிரிக்கு மரணதண்டனை விதித்த நீதியரசர் அவரைப் பார்த்து, "உமக்கு ஏன் மரணதண்டனை விதிக்கக்

[6-ம் பக்கம் பார்க்க]

## "சீனாவை இலங்கை பின்பற்றவேண்டும்"

யாழ்ப்பாணம், திங்.

"மேற்கத்திய நாடுகளைத்தான் இலங்கை இதுவரை நாளும் பின்பற்றிவந்தது. ஆனால் இப்போது கிழக்கத்திய நாடுகளை, இலங்கை பின்பற்றுகிற நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிலும் கிழக்கு நாடுகளில் இப்பொழுது முன்னணிவகிக்கும் சீனாவை இலங்கை உரிமையுடன் பின்பற்றவேண்டும்" என்று நேற்று மாலை யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சீன தேசிய தினக் கொண்டாட்டத்தில் திரு. வ. மகாலிங்கம் குறிப்பிட்டார்.

இலங்கை-சீன நண்பர்கள் சங்க யாழ். பிரதேசக் கிளையின் ஆதரவில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. ஏ. எஸ். கனகரத்தினம் தலைமை வகித்தார்.

திரு. மகாலிங்கம் மேலும் பேசுகையில் "பதினெட்டு

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதகுலம் மறக்காத மகாத்மா

**அஹிம்சையால் அவனியை ஆட்கொண்ட அண்ணல் காந்தியின் 99-வது காந்தி ஜெயந்தி விழாவினை இன்று அகிலமெலாம் கொண்டாடுகிறது. அதனை முன்னிட்டு இக்கட்டுரை வெளியாகின்றது-**

கத்தியின்றி இரத்தமின்றி அஹிம்சையால் பாரதநாட்டின் அடிமைத் தளையை அறுத்தெறிந்து ஆன்மசக்தியால் அழகிய பாரதத்தினை உருவாக்கிய மகாத்மாவின் தொண்ணூற்றென்பாவது பிறந்த பொன்னுளை இன்று உலகமெலாம் கொண்டாடுகிறது. இவ்வுலகில் நூற்றைம்பது ஆண்டுகள் வாழ்வேன் என்று கூறிய கர்ம வீரர் வையம் உள்ளவரை வாழ்வாங்கு வாழச் செயற்கரிய செயல்களைச் செய்து சென்றுள்ளார். உலகம் வாழ்வதற்காகப் பிரார்த்தனை செய்ய மணிக்கூட்டினைப் பார்த்துவிட்டு போய் வருகிறேன் என்று புறப்பட்ட காந்தியைத் தொழுகைக்குள் துப்பாக்கியை வைத்திருந்த மதவெறியாளன் ஒருவன் சுட்டுக்கொலை செய்தான். இக்கொடிய செய்தி உலகத்தார் உள்ளத்தையெல்லாம் துளைத்தெடுத்தது.

உண்மையையும் நன்மையையும் - சத்தியத்தையும் பண்பையும் - துருவித் துருவி ஆராய்ந்து ஆன்ம வளர்ச்சி பெற்ற மகாத்மா மனிதப் பண்பாட்டின் சரித்திரத்தில் நிரந்தர இடம் பெற்றுவிட்டார். 'எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய உண்மையை ஒருவர் நேருக்கு நேராகக் காணவேண்டுமானுல், அவர் மிகுந்துள்ளனவாகக் கருதப்படும் உயிரினங்களையும் தம்மைப் போல நேசிக்கும் தன்மை வாய்க்கப் பெற்றிருப்பவராய் இருத்தல் அவசியம். எவர் ஒருவர் அத்தகைய நிலையை விரும்பிப் பின்பற்றுகிருரோ, அவர் வாழ்க்கைக் கடமைகளிலிருநது விலகி எவ்வாற்ருனும் வெளியே நிற்க இயலாது. அதனுலேதான், சத்தியத்தில் ஏற்பட்ட என்னுடைய வழிபாடே என்னை அரசியல் உலகில் ஈடுபடச் செய்தது' சிறிது காலந்தாழ்த்தாமலும், மிக்க வணக்கத்துடனும் கூறுகிறேன். எவர் ஒருவர் மதத்திற்கும் அரசியலுக்கும் யாதொரு விதத் தொடர்பும் இல்லை என்று கூறுகிருரோ, அவருக்கு மதம் என்பதன் பொருளே தெரியாது. மற்றும், அழிந்துவிடும் இவ்வுலகஇராச்சியத்துக்கு நான் சிறிதேனும் இச்சைப்படவில்லை. நான் மோட்ச சாம்ராச்சியத்துக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கின்றேன். அதுவே ஆன்மீக விடுதலையாகும். என் தாய் நாட்டிற்கும் மனித இனத்துக்கும் தொண்டாற்றுவதிலேயே என்னுடைய மீட்சிக்குரிய வழி இருப்பதாக நான்கருதுகின்றேன். எவை எல்லாம் உயிர்ப்புடன் வாழ்கின்றனவோ அவற்றுடெல்லாம் என்னை ஒன்றுபடுத்திப் பார்க்க விரும்புகின்றேன். நிரந்தர சுதந்திரமும் சாந்தியும் நிரம்பியுள்ள ஓர் உலகிற்குச் செல்லும் யாத்திரை வழியில், எனது தேசப்பற்று ஒரு பகுதியாகவே விளங்குகின்றது. ஆகையால் மதம் இல்லாத அரசியல் எனககு இல்லை என்பது எளிதில் உணரப்

[6-ம் பக்கம் பார்க்க]

மணிவாக்கு

கடவுளிடம் நம்பிக்கை உடையவன் சுயமரியாதையை அடைகிருன். கடவுளிடம் நம்பிக்கை இல்லாதவனுக்கு உரிமை என்பது இன்னதெனத் தெரியாது. நல்லது செய்வது எப்படி என்பது அவனுக்குத் தெரியாதென்பதே எனது திடமான நம்பிக்கை.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஞூ புரட்டாதி மீ 16உ 2-10-67)

## காந்தீய வழி

இன்று மகாத்மா காந்தி பிறந்தநாள். இந்தியாவில் மட் மன்றி, இலங்கை உள்ளிட்டு பல நாடுகளிலேயே பல பல இடங்களில் இவ்விழா கொண்டாடப் படுகின்றது. நமக்கு அரசியல் விடுதலை பெற்றுத்தந்த அந்த மகானின் விழாவை நன்றியுடன் கொண்டாடுகையில் இன்று நமது சமூகத்திலும் நாட்டிலும் உள்ள சிக்கல்களை உணர்ந்து, அவற்றைத்தீர்க்க, அவர் கூறிய யோசனைகளை நினைவுகூர்ந்து கூடுமானவரை பயன்படுத்துவது நன்மையாகும்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் மகாத்மாகாந்தி இங்கு விஜயம் செய்த போது நாம் அரசியல் அடிமைப்பட்டிருந்தோம். இருபது வருடங்களுக்கு முன் இந்தியாவுடன் நாமும் விடுதலைபெற்ருேம். விடுதலை பெற்ற பின் நமது இன்றைய நிலைமை என்ன? சுதந்தரத்தை நாம் நல்லபடியாகப் பயன்படுத்தி முன்னேறியுள்ளோமா என்று நம் நெஞ்சில் கைவைத்துக் கேட்டால் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

சுதந்திரத்துக்குப் பின் இங்கு நல்லூர் உள்ளிட்டு சில முக்கிய ஆலயங்களின் கதவுகள் திறந்திருப்பினும், சாதிக்கொடுமையும், துவேஷமும் மறைந்த பாடில்லை. இந்துக் கோவில்களில் மட்டுமல்ல மற்ற சமய வழிபடும் ஸ்தலங்கள் சிலவற்றிலும் கூட அன்பற்ற காரியங்கள் நடந்துள்ளதைப் பார்க்கின்ருேம். சமூக ஒற்றுமையோ, சமய சமரசமோ ஏற்படவில்லை.

சமயங்களின் உண்மை நோக்கம் நம்மை நல்லவராக்கி, அன்பு வாழ்வு வாழச் செய்வது தான் என்றும் சத்யம், அகிம்சை இரண்டையும் நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் இங்கு பல கூட்டங்களிலும் அவர் கூறிவந்தார். கதர், கிராமத் தொழில், மதுவிலக்கு, சமூகசமரசம், தீண்டாமை ஒழிப்பு இவற்றை வற்புறுத்தினுர். அவர் இப்படிக்கூறி வருடங்கள் நாற்பதாகியும் நாடு விடுதலை பெற்றும் கூட, நிலைமை விரும்பத்தக்க அளவுக்கு முன்னேறவில்லை

நமக்குத் தேவையான உணவு, உடை முதலியவற்றை நாமே தயாரித்து தன்னிறைவுபெற வேண்டுமென்ருர். ஆனுல் நாம் இன்றும் உணவுக்கும் உடைக்கும் வெளியார்களையே பெரிதும் நம்பி வாழ்கின்ருேம். கப்பலில் பால் உணவு வராவிட்டால் நம் குழந்தைகள் பட்டினிதான். அரசாங்கம் சிற்சில காரியங்களைச் செய்கின்றதெனினும் பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பையும் பெறக்கூடிய வகையில் இங்கு காரியங்கள் நடக்கவில்லை. அரசாங்கம் மட்டும் இவற்றை சாதிக்க முடியாது. பொதுமக்களில் ஒவ்வொருவரின் ஆர்வத்துடன் கூடிய ஒத்துழைப்பும் அவசியம் தேவை.

சீனஅரிசி கிடைக்காவிட்டால் இனி என்ன என்று ஒருபக்கம் திகைக்கையில் இந்நாட்டிலே உள்ள உழைப்பாளிகளான கமக்காரரில் லட்சக்கணக்கானவர்களை, நாடுகடத்தும் திட்டத்தைத் தீட்டுவதில் பலரும் ஈடுபட்டிருக்கிருேம். உணவு உற்பத்தியைப் பெருக்குவது தான், முக்கிய தேசீயக் கடமையாயின் அதற்கு இந்நாட்டிலுள்ள ஆள்பலத்தைப் பூரணமாகப் பயன்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டாமா? பணலாபத்தைக் கருதி வியாபாரப் பொருள் உற்பத்திக்குக் கூடுமானவரை நம் நிலங்களை பயன்படுத்துவதைவிட்டு உணவுப்பொருள் உற்பத்திக்கே நிலங்களைப் பாவிக்கவேண்டாமா?.

நமது கற்பகவிருட்சமான பனையை, சீனி வெல்லம் இவற்றைத் தயாரிக்கவும், சீனிக்காக நமது செல்வத்தை வெளியேற்ருமல் தடுக்கவும் பயன்படுத்துவதற்கு பதில், மதுபான உற்பத்தியையும், குடியையும் பெருக்கி நாட்டிலும் வீட்டிலும் அமைதியைக் குலைத்து, குற்றங்களைப் பெருகச் செய்வது சரியா? இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதக்கோட்பாடுகளுக்கு மதுபானம் முரணல்லவா? சமயக்கல்வியை வற்புறுத்தும் அரசாங்கம், ஏன் சமயக் கோட்பாட்டின்படி மக்கள் வாழும்படி மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர மறுக்கின்றது?

பொதுமக்களும் சிறப்பாக நமது தலைவர்களும் இவ் விஷயங்களை யெல்லாம் பற்றி கட்சிபேதங்களை மறந்து, சிந்தனை செய்து, காந்தீய வழியிலே நாட்டை முன்னேறச் செய்ய தக்க திட்டங்கள் தயாரித்து அமுல் நடத்த தியாக புத்தியுடன் முன்வரவேண்டும். இன்றேல் நாடு பலாத்கார புரட்சிப்பாதையில் சென்று, நாம் ஜனநாயக சுதந்திரத்தை இழந்துவிடக் கூடிய ஆபத்து ஏற்படுவதாக இருக்கும். இன்றைய நமது பல பிரச்னைகளுக்கும் நல்ல வழிகாட்டக்கூடியது காந்தீயமே என்பதில் ஐயமில்லை.

## இன்றைய பலன்

2-10-67

திங்கட்கிழமை

(புரட்டாதிமாதம் 16உ)

நட்சத்திரம் - பூரம் மாலை 5-42 மேல்உத்தரம் திதி-திரயோதசி. பகல் 7-04மேல் அமாவாசை.

சுபநேரம்- 12-02-1-32

ராகுகாலம்- 7-32-9-02

மேஷம்-அன்பின் அழைப்பு, ஆனந்த நிலை.

ரிஷபம்- நலிவு மடியும், நல்லநாள்.

மிதுனம்- உழைப்பால் உயர்வு, ஊதியம் பெருகும்.

கடகம்-பொருள்முடை பொறுமைக்குச் சோதனை

சிம்மம்- கவலையின் ரேகை, காலதாமதம்.

கன்னி-பேச்சில் உடன்பாடு, மறைந்துவிடும். முரண்பாடு

துலாம்-நரிவேலை நடக்கும், நன்ருகப்பார்.

விருச்சிகம்-வாகனசுகம் வரவுமுண்டு.

தனுசு - காத்திருக்கும் விருந்து, பூத்திருக்கும் காதல்.

மகரம்-பாதையில் படுகுழி, பார்த்துநட.

கும்பம் - அமைதிக்கு அழைப்பு, அழகின் சிரிப்பு.

மீனம்- ஆயுத பயமுண்டு, அவதானம்வேண்டும்.

—சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## மகாத்மாகாந்தி

— திமிலைக்கண்ணன் —

காந்தி நல்ல காந்தியாம்;
கருணை யுள்ள காந்தியாம்;
மாந்த ருக்குள் தெய்வமான,
மகா த்மா காந்தியாம்.

உண்மை யன்பு நேர்மையால்
உயர்ந்த நல்ல காந்தியாம்;
தண்ணெனக் குளிர்ந்த இன்சொற்
சாந்த மூர்த்தி காந்தியாம்.

பூமிபோல் பொறுமை மிக்க
புனித ஞானி காந்தியாம்
காமகார இச்சை யற்ற
கருணு மூர்த்தி காந்கியாம்.

அடிமை வாழ்வை வெறுத்தொதுக்கி
அநீதி மாய்த்த காந்தியாம்,
கடமையிற் கருத்து வைக்கும்
கர்ம வீரர் காந்தியாம்.

உத்தமர் மகாத்மாவின்
உயர் வழியைப் பற்றுவோம்!
சுத்த சுதந்திர வீரராக
துணிந்து நாமும் வாழுவோம்!

## நாட்டிலும் நகரிலும்

ஒரு நாட்டின் நாகரீகத்தையும் பண்பாட்டையும் பிரதிபலிப்பது அதன் கலைவளம் என்ருல் அதைப் பேணிப் போற்றி வளர்த்து வரும் கலைஞர்களை ஆதரிப்பது அந்நாட்டு அரசின் கடமையாகும். முற்காலத்தில் முடியாட்சி இருந்தபோது மன்னர்கள் கலைஞர்களை கவனித்துவந்தார்கள். பின்பு பிரபுக்களும் பெரியோரும் இவ்வரிய பணியைச் செய்தனர்.

ஜனநாயக அரசாங்கங்கள் ஏற்பட்ட பின்னர் இக்கடமை அவை மீது பொறிந்தது. கலைஞர்கள் தங்கள் வாழ்நாளில் சுதந்திரமாக, அல்லல் தொல்லையின்றி வாழவேண்டும். மற்றும் தொழிலாளரைப் போல் இல்லாமல் கலைகளுக்காகத் தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்த கலைஞர்களுக்கு அரச பீடத்திலிருப்பவர்கள் விசேஷ வசதிகளைச் செய்யவேண்டுமென்றும் வற்புறுத்தலாம்.

ஆகாசவாணி என்னும் அகில இந்திய ரேடியோவில் கடமையாற்றும் வித்துவான்கள் இது காறும் கொந்தருத்துமுறையிலேயேகடமை செய்துவந்தார்கள். நினைத்த நேரத்தில் அவர்களை வேலையிலிருந்து நிற்பாட்டலாம். இப்படிப்பட்ட நிலை இன்று மாறியிருக்கிறது.

நிலைய வித்துவான்கள் எல்லோரையும் மற்ற உத்தியோகத்தர்கள் போலவே நிரந்தர ஊழியர்களாக இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்க செய்தி.

கலைஞர்களும் பிறமானிட ஜன்மங்களைப் போல நரை, திரை, மூப்பு, பிணி முதலியவற்றுக்கு உள்ளானவர்கள். வயது போகப் போக சிலரின் கலை வன்மை குறையும், கூடும். அதற்காக அவர்களது பிற்கால சீவியம் நலிவடையப்படாது.

பொதுவாக கலைஞர்களில் கனி பலர் [இங்கே வானெலி வித்வான்களை குறிப்பிடுகிறேன்]நாள் செல்லச் செல்ல அனுபவமும் சாதகமும் அதிகரித்துச் சிறந்த கலை வல்லுனராவது திண்ணம். நோய், பிணி இல்லாவிடின் இதுதான் நியதி. ஆரம்ப காலத்தில் கற்றுக்குட்டிகளாயிருந்த பலர் வானெலியில் தினமும் சாதகம் செய்வதன் மூலம் பழுத்துக் கனிந்த வித்துவான்களாகின்றனர்.

இலங்கை வானெலியில் கடமைசெய்யும்நிலையவித்துவான்களின் நிலைமை என்ன? 1952-ம் ஆண்டு துவக்கமே இலங்கை வானெலியில் நிரந்தரமான நிலைய வித்துவான்கள் இருந்துவருகிருர்கள். இவர்கள் இன்னமும் கொந்தருத்து முறையிலயே அமர்த்தப்பட்டிருக்கிருர்கள்.

ஏதாவதொரு காரணத்தால் இவர்கள் தங்கள் வேலையை விடவேண்டி நேரிட்டால் அவர்கள் கதி என்ன? தெருத் தெருவாய் அலைந்து திரிவதா?

ஆகாசவாணி அரசாங்க ஸ்தாபனம். இலங்கை வானெலி கூட்டுஸ்தாபனம்; எப்படியிருந்தாலும் நிலைய வித்துவான்களுக்கு ஏதாவதொரு பென்ஷன் அல்லது சேமலாபநிதி அளிக்கப்பட வேண்டியது எந்த ஸ்தாபனத்தின் கடமையாகும்.

சிலபயின் குற்றத்திற்காக கலைஞர்களை கவலையுறவிடப்படாது.

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காந்தியடிகளை உளமார ஏற்று அவர்தம் புகழைப் பரப்புவோம்'

## காந்தி ஜயந்தியை ஒட்டி

## தமிழக முதல்வர் அறைகூவல்

சென்னை, ஒக்டோபர் 1

**காந்தி ஜயந்தியை யொட்டி, தமிழக முதல் மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை, தமிழக மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில் 'நமது நாட்டின் தந்தையாக, வழிகாட்டும் தோன்றலாகக் காந்தியடிகளை உளமார ஏற்று, அவர்தம் புகழையும், சிறப்புகளையும் நாடு எங்கும் பரப்புவது எமது தலையாய கடன்' என்று குறிப்பிட்டுள்ளார்.**

அவர் மேலும் கூறுவதாவது:-

'உழைப்பின் உயர்வு, வாய்மையில் வன்மை இவைகளே காந்தியாரின் தியாக வாழ்வு தந்த பாடங்கள். தன்மான உணர்வு, தளரா நம்பிக்கை இவைகளை மக்களுக்கு வலியுறுத்தியவர் காந்தியடிகள். எளிய வாழ்க்கை, சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் செம்மைப்படுத்தி, மிக்க பயன் தரும் என்று செயலாற்றிக்காட்டிய பெரியவர். ஆண்டவன் பெயரால் ஏற்பட்ட சாதி, மத பேதங்களைத் தவிர்த்து, ஒன்றுபட்டு உழைத்து, ஒவ்வொருவரும் உரிமையை உணர்ந்து, பெற்று, போற்றி, கடமை அறிந்து கண்ணியம் கடைப்பிடித்துக் கட்டுப்பாட்டுடன் வாழ்தல் முறை என்று வலியுறுத்தி வாழ்ந்துகாட்டியவர் காந்தியடிகள்.

### மதுவிலக்கு

மதுவிலக்கே ஏழை எளிய மக்கள் இன்ப வாழ்விற்கு உற்ற மருந்து என்று அவர் மாருத மனம் படைத்திருந்தார். இந்திய மக்கள் உரிமைப் போராட்டத்தில் திருவள்ளுவரின் பொன்மொழி,

''வினைவலியும், தன்
வலியும்
மாற்ருன் வலியும்,
துணை வலியும் தூக்கிச்
செயல்''

என்பதனை உணர்ந்து, ஏற்று அறப்போர் முறையை வகுத்து வெற்றியும் கண்டவர். அன்னூர் பிறந்த தின விழாவன்று இவைகளை எல்லாம் சிந்தித்துச்செயலாற்றி மக்கள் சமுதாயம் வளம் பெற்று வாழ என்ன செய்திடல் வேண்டும் என்று எண்ணி அதனை உறுதி கொள்வோமாக.

### வியப்பும் வேதனையும்

இயற்கை வளங்களும், மனித சக்தியும் மிகப்பெருமளவில் மலிந்து கிடக்கின்றன, நமது நாட்டில். ஆனுல் இப்பெரும் செல்வக்குவியல் நமக்கருகிலிருந்தும் அதன் பயனை முழுதும் பெருதவர்களாய்வாழ்கின்ருேம் என்று எண்ணும் போது, வியப்பும் வேதனையுமே மிஞ்சுகின்றன. வளங்களை மக்களினம் பயன்படுத்திக்கொள்ள மிகத் தேவை உழைப்புத்தான்.

உழைப்பின் சிறப்பையும், பெருமையையும் வாழ்நாள் எல்லாம் நமக்கு அறிவுறுத்திவந்த உத்தமபெரியாரின் பிறந்த நாளினைக் கொண்டாடும் நாம், எத்தகைய தொழிலும் வேற்றுமை ஏதுமில்லையென்பதைத் தெரிந்து நமது பங்கினைச் செம்மையாகச் செய்யத் துவங்கவேண்டும். அவரது நினைவிற்கென இவ்வாண்டு அவரது 98-வது பிறந்த நாளினை உற்பத்திப் பெருக்க விழவாகக் கொண்டாட முடிவு மேற்கொண்டுள்ளோம். உற்பத்திப் பெருக்கத்தில் பங்குகொள்ள அனைவரும் வேற்றுமைகளையும், பேதங்களையும், உயர்வு தாழ்வினையும் உதறித்தள்ளி யெறிந்து உழைக்கப் புறப்படவேண்டும். எத்தகைய உழைப்பினும் கேவலமோ, தாழ்வோ இல்லையென உணர்ந்து உழைக்கத் தொடங்க வேண்டும். விவசாயப் பெருமக்கள், நகர்ப்புறத்து மாந்தர், மகளிர், மாணவர்கள் தொழிலாளர்கள் மற்றெல்லோரும்இப்பணியில்தங்களை அர்ப்பணித்துக்கொண்டு உழைக்கப் புறப்படுவீர் எனப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

### நாட்டின் தந்தை

நமது நாட்டின் தந்தையாக, வழிகாட்டும்தோன்றலாகக் காந்தியடிகளை உளமார ஏற்று அவர் தம் புகழையும், சிறப்புக்களையும் நாடெங்கும் பரப்புவது நமது தலையாய கடன். வீடுதோறும் அவர் தம் சிறப்புக்கள் ஒலித்துக்கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழந்தையுங்கூடத் தான் காந்தி நாட்டுக் குழந்தை என்பதைப் புரிந்துகொண்டு புன்னகை செய்தல் வேண்



[4-ம் பக்கம் பார்க்க]

# மே. ஆசிய பிரச்னை தீர்வுக்கு இரகசிய பேச்சுவார்த்தைகள்

## ஐ. நா.வில் நடைபெறுகின்றன

நியூயோர்க், ஒக். 1

மேற்கு ஆசியப் பிரச்னையைத் தீர்க்குமுகமாக ஐ. நா.வில் இரகசிய பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தப்படுவதாக ஐ. நா. பொதுக் காரியதரிசி யூதாண்ட் அறிவித்துள்ளார்.

மேற்கு ஆசிய பிரச்னையைத் தீர்ப்பதற்கு, ஐ. நா. பொதுச்சபையைவிட ஐ. நா. பந்தோபஸ்து சபையே உகந்த இடமென ஐ நா. வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

## மணிப்புரியில் வெள்ளம்

இம்பால், ஒக். 1

கடந்த சில நாட்களாகத் தொடர்ந்து மழை பெய்ததன் விளைவாக, மணிப்புரி ராஜ்யத்திலுள்ள எல்லா ஆறுகளும் வெள்ளப் பெருக்கெடுத்துள்ளன. ஆனுல்நீர் மட்டம் அபாய மட்டத்தை இன்னும் தாண்டவில்லை.

மே. வங்காள

## தொழிற் கொள்கைக்கு கண்டனம்

கல்கத்தா, . ஒக் 1

மேற்குவங்காள ஐக்கிய இடதுசாரி முன்னணி அரசாங்கத்தின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றின் ஸ்தாபகர்களில் ஒருவரான பேராசிரியர் ஹுமாயின் கபீர், மேற்கு வங்காள அரசாங்கத்தின் தொழிற் கொள்கையைக் கண்டித்துள்ளார்.

தவறு இழைக்கும் தொழிலதிபர்கள் சிலர் இருக்கத்தான் செய்கிருர்களென்று கூறிய பேராசிரியர் கபீர், பயமுறுத்தலினுலும், பலாத்காரத்தினுலும் அவர்களை வழிக்குக் கொண்டுவருவது பிழையான முறையாகுமென்று குறிப்பிட்டார்.

பீஹாரில்

## கேரோ கிளர்ச்சி தடைசெய்யப்பட்டது

பட்னு, ஒக் 1

கேரோகிளர்ச்சிமுறை, அரசியற்சாஸனத்துக்கு மாருனதும் சட்ட விரோதமானதுமெனப் பீஹார் அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

பத்திரிகையாளர் மாநாடொன்றில், பீஹார் பொலிஸ் மந்திரி திரு. ராமானத்திரிவாதி, இத்தகவலை வெளியிட்டார்.

ராஜ்யத்திலுள்ள எல்லாத் தொழிற் பகுதிகளிலும், பொலிசாரின் பலத்தை அதிகரிக்க, வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காஷ்மீரில்

## உல்லாசப் பிரயாணிகள் அதிகரிப்பு

ஸ்ரீநகர், ஒக். 1

இவ்வாண்டில் இதுவரை காஷ்மீருக்கு 1 லட்சத்து 9000 உல்லாசப் பிரயாணிகள் விஜயம்செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில், உல்லாசப் பிரயாணிகளின் தொகை 93,000 ஆக இருந்தது. இந்த உல்லாசப்பிரயாணிகளில் பெருந்தொகையானேர் வெளிநாட்டவராவர்.

# வியட்னும் பற்றிய ஜோன்சன் பேச்சில் புதிதாக ஒன்றுமில்லை

## சோவியத் யூனியன் கருத்து

மாஸ்கோ, ஒக். 1

வியட்னும் பற்றிய அமெரிக்க ஜனதிபதி திரு ஜோன்சனின் கொள்கைப் பேச்சையிட்டு சோவியத் யூனியனில் உடனடியாகப் பிரதிபலிக்கப்பட்ட கருத்தின்படி, அவர் புதிதாக எதுவும்தெரிவிக்கவில்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா, வியட்னுமிலான தனது ஆபத்தான கொள்கையையே இன்னும் பின்பற்றி வருவதாகவும், ஐ. நா.வில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆலோசனைகளை அது மதிக்கவில்லையென்றும் சோவியத் செய்தித்தாபனம் 'டாஸ்' குறிப்பிட்டுள்ளது.

## 'பயனுள்ள நடவடிக்கை எதுவும் எடுக்க முடியாது'

— யூ தாண்ட்

நியூயோர்க், ஒக். 1

வியட்னும் பிரச்னை, ஐ. நா. சாசனத்தின் அடிப்படையில் தீர்க்கப்படுமென்ற நப்பிக்கையை ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார். ஆனுல், அமெரிக்கா வடவியட்னும் மீதான குண்டுவீச்சை நிறுத்தும் வரை, பயனுள்ள நடவடிக்கை எதையும் என்னுல் எடுக்க முடியாது' என்ருர் யூதாண்ட்.

## 'வியட்னும் மக்களுக்கான கடமையை சீன செய்யும்'

— சூ—என்—லாய்

பீகிங், ஒக். 1

சீனவின் தேசிய தினக் கொண்டாட்டத்தில் நேற்றுப் பங்குபற்றிப் பேசுகையில், வியட்னும் மக்களுக்கான தனது கடமையைச் சீன நிறைவேற்றுமெனச் சீனப் பிரதமர் திரு. சூ-என்-லாய் வலியுறுத்தியுள்ளார்.

உ. பி.

## ஆளுங்கட்சியிலிருந்து சுதந்திரா வாபஸ்

புதுடில்லி, ஒக். 1

உத்தரப் பிரதேசத்தில் ஆளுங்கட்சியான சம்யுக்த தளத்தில் அங்கத்துவம்வகிக்கும் சுதந்திராக் குழுவை, சம்யுக்த தளத்திலிருந்து வாபஸ்பெறுமாறு சுதந்திராக்கட்சியின் தேசியசெயற்குழு பணித்துள்ளது.

## தனிஉணவு மண்டலம் பற்றி இந்திரா

ராஜ்காட், ஒக். 1

இந்தியாவின் ராஜ்ய தனி மண்டல உணவுமுறை அகற்றப்படுவதுபற்றி, உணவு நிலைமை சீரடைந்த பிறகே யோசிக்கலாமென இந்தியப் பிரதம மந்திரி இந்திரா காந்தி இன்று பத்திரிகையாளர் மகாநாடொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

# பாகிஸ்தான் செல்லும் ஜெனரல் குமாரமங்கலம்

புதுடில்லி, ஒக். 1

இந்தியாவின் இராணுவத் தளபதி ஜெனரல் குமாரமங்கலம், இம்மாதம் பாகிஸ்தான் செல்லவிருக்கிருர்.

அங்கு அவர் பாகிஸ்தான் இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேசுவார். இவர்களிருவரும் முன்னர் நடத்திய பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாக இவ் விஜயத்துப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்.

ஜெனரல் குமாரமங்கலத்தின் பாகிஸ்தான் விஜயம் எப்போது மேற்கொள்ளப்படுமெனத் திகதி குறிக்கப்படவில்லையாளுலும், அவர் இம்மாத நடுப்பகுதியில் பாகிஸ்தான்செல்வாரெனத் தெரிகிறது.

# யூகோஸ்லேவியா பஸ் விபத்தில் 14 பிரிட்டிஷ் மாணவர் மரணம்

பெல்கிரேட், ஒக். 1

யூகோஸ்லேவியாவில் ஏற்பட்ட ஒரு பஸ் விபத்தில், 14 பிரிட்டிஷ் பல்கலைக்கழக மாணவர்கள் உயிரிழந்தனர். மற்றும் 17 பேர் காயமுற்றனர்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு நல்லெண்ண விஜயத்தில் சென்றுவிட்டு லண்டன் திரும்பிக் கொண்டிருந்த இம் மாணவர்களின் பஸ், லொறி ஒன்றுடன் பொருத்தப்பட்ட கிரேனில் மொழுவுண்டு, விபத்துக்குள்ளாகியது. பஸ்ஸின் மேற்பாகம் அப்படியே கிழித்தெடுக்கப்பட்டுவிட்டது.

இறந்த மாணவர்களின் சடலங்கள் இன்னும் அடையாளங் காணப்படவில்லை.

## ஹைபொங் துறைமுகம் மீது கடுமையான விமான தாக்குதல்

சைகோன், ஒக் 1

நேற்று, அமெரிக்க விமானங்கள், வட வியட்னும் துறைமுகமான ஹைபொங் மீது கடும் தாக்குதல் நடாத்தின.

ஹைபொங் துறைமுகத்துக்கும், வட வியட்னுமின் இதர இடங்களுக்குமிடையேயான நிலமார்க்கமான தொடர்புகளை, இவ் விமானத் தாக்குதல் மூலம் முறியடித்துள்ளதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றைய விமானத்தாக்குதலில், 4 அமெரிக்க விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாக [illegible] வியட்னும் அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

<u>கிளிநொச்சி வர்த்தகர் கடத்தல் வழக்கு</u>

# 'காரினுள்ளிருந்து கத்தும் சப்தம் கேட்டது'

சாவகச்சேரி, ஞாயிறு

''இவ்வருடம் ஜூன் மாதம் 21-ம் திகதி காலை 7 மணிக்கு பரந்தன்—முல்லைத்தீவு வீதிக்கு அண்மையில் உள்ள எனது ஆட்டுப் பட்டியிலிருந்து வீட்டிற்குச் செல்லும்போது முல்லைத்தீவு வீதியால் ஒரு கார் சென்றது. அதனுள் யாரோ கத்தும் சத்தம் கேட்டது. நான்பார்த்தபோதுஅக்கார் தண்ணீருக்குள்ளால்சென்று கொண்டிருந்தது. பெரும் அலைகள் தண்ணீரில் காணப்பட்டதால் கார் நம்பரையும், காரினுள் இருந்தோரையும் பார்க்க முடியவில்லை''

கிளிநொச்சி முல் வியாபாரி கடத்தல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. ஜே. விக்னராசா முன்னிலையில் மீண்டும் விசாரணை செய்யப்பட்டபோது சாட்சியமளித்த க. கந்தசாமி (32 வயது) என்பவர் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் மாதம் கிளிநொச்சியைச் சேர்ந்த எம். கார்வாலியோவைக் கடத்திச் சட்டவிரோதமாகக் கூட்டம் கூடி பயங்கர ஆயுதங்களை வைத்துப் பயமுறுத்தியதாகவும், கையால் அடித்ததாகவும் 21-ம், 22-ம், 23-ம் திகதிகளில் தர்மபுரம் காட்டினுள் வைத்திருந்ததாகவும், சதாசிவம் ரத்தினம், பிலிப் ராசதுரை, கதிரவேலு காளிமுத்து, பி. தம்பிராசா அல்லது நமசிவாயம், கே. தம்பிராசா அல்லது சின்னத்துரை, பொன்னையா தனபாலசிங்கம் ஆகிய ஆறுபேர் மீதும் பத்துக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் புரக்டர்கள் வி. செல்லத்தம்பி, எஸ். பி. மயில்வாகனம் ஆகியோரின் அனுசரணையுடன் அட்வக்கேட் ரி. தம்பித்துரை ஆஜரானுர், வழக்காளி தரப்பில் கிளிநொச்சிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் வி. ராஜேஸ்வரன் வழக்கை நடாத்தினுர்.

சி. சிவசுப்பிரமணியம் என்பவர் சாட்சியமளிக்கையில் அன்று காலை தனது பெற்ருேல் நிலையத்திலிருந்து ஒரு காரில் கார்வாலியோ சென்றதாகக் கூறினுர்.

மேல்விசாரணை அக்டோபர் 7-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## காந்தியடிகளை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

டும். அவரது நினைவு நம் இதயங்களில் நீங்காத உயிரோவியமாய் நிலவிடல் வேண்டும்.

அவர் கனவாய், வாழ்வாய்க்கொண்டிருந்த தீண்டாமை, சாதி, மதபேத ஒழிப்பு, மதுவிலக்கு போன்றவைகளை நமது வாழ்வின் குறிக்கோள்களாய்க் கொண்டு சிறத்தல்வேண்டும். சட்டங்கள் மூலமாக மட்டும் இவற்றை சமுதாயத்திலிருந்து நீக்கிவிட முடியாது. நம்முடைய இதயக்கதவுகளை நமே திறந்து பார்க்கும்போதுதான் இச் சமூகக் கேடுகளைக் கிள்ளி எறிந்துவிடமுடியும். அவற்றின் ஒருங்கமைந்த தீமைகள் எவ்வாறு மனித இனத்தையே விழுங்கிவிடும் என்பதை உணரும்போதுதான் அவைகளை அகற்றிவிடமுடியும். நம்முன்னே அவரை நிறுத்தி அவர்தம்கொள்கை வழி அனைவரையும் நடக்கச் செய்தலே காந்திக்கு நாம் செலுத்தும் பெரும் அஞ்சலி.

### காந்தி கனவை நனவாக்குவோம்

காந்தியடிகளின் நூற்ருண்டுவிழா மாநிலக் குழுவின் தலைவனென்றமுறையில் இக் கருத்துக்களைத் தமிழக மக்களுடன்பகிர்ந்து கொள்ளுவதில் உவகை கொள்கிறேன். அவர் தம் கனவினை நனவாக்கத் தமிழக மக்களுடன் உழைப்பது பெரும் வாய்ப்பெனவும் கருதுகிறேன். அவர் தம் நினைவினைப் பட்டி தொட்டிகள் எல்லாம் பரப்ப அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென விழைகிறேன். இப்பணியில் எவரும், எக் கட்சியைச் சார்ந்தவர்களாயினும் எப்பிரிவினராயினும், எந்நிலையில் உழைப்பவர்களாயினும், [அரசாங்க ஊழியர்கள் உட்பட] ஈடுபட வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.''

## திருட்டு வழக்கில் வாலிபருக்கு ரிமாண்ட்

சாவகச்சேரி, ஞாயிறு

கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு வந்த மெயில் வண்டியில் சுமார் 421 ரூபா மதிப்பிடும் பொருட்கள் அடங்கிய சூட்கேசைத்திருட முயன்ற வாலிபர் ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

சென்ற மாதம் 28-ம் திகதி மெயில் வண்டியில் பளைக்கும் எழுதுமட்டுவாளுக்குமிடையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜோன் பீற்றர் சூரியவீரா என்பவருக்குச் சொந்தமான ரூபா 421 மதிப்பிடக் கூடிய பொருட்களடங்கிய சூட்கேசைத் திருட இவர் முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாகப்பளைப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட எஸ். சுந்தரமூர்த்தி என்ற வாலிபர் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. வி எம். குமாரசுவாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 7-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டார்.

''சூரியன் மார்க்''

வாசனை சந்தனவில்லைகள்

வாசனை சந்தனப் பவுடர்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# தருமபுரத்தில் கஸ்தூரிபாய் நிலையம்

யாழ்ப்பாணம், திங்கள்

மகாத்மா காந்தியடிகளின் போதனைகளுக்கும், சர்வோதய இலட்சியங்களுக்கும் அமைய, பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அகில இலங்கைக் காந்தீய சேவாசங்கம் 'கஸ்தூரிபாய் நிலையம்' என்னும் மகளிர் இல்லம்ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. நமது நாட்டுப் பண்பாட்டு பழக்க வழக்கங்களும், நாகரிககலாசாரத் துறைகளும், கலப்படம் செய்யப்பட்டுவரும் நேரத்தில் ஆண்கள் சமூகம் முன்னேற்றமடைந்து நாட்டுப்பணிகளின் நலன்களைக் கவனிப்பதற்கு மேற்படி சங்கம் ஆண்களுக்கான ஒரு தொழில் பயிறசிநிலையத்தை ஏற்கனவே 'காந்தி நிலையம்' என்னும் பேரில் உருத்திரபுரத்தில் ஆரம்பித்து நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இக்காந்தி நிலையத்தில் அனுதரவான ஏழைப்பிள்ளைகளுக்கு உணவு, உடை, கல்வி, தொழில் ஆகிய சகல துறைகளிலும் இலவசமாகப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

அனுதரவான ஏழை ஆண்களுக்கு அளிக்கப்பட்டுவரும் இலவச பயிற்சிகளைப்போலவே தருமபுரத்தில் அமைக்கப்படும்கஸ்தூரிபாய் நிலையமும் ஏழைப் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கும்.

இந்நிலையம் அனுதரவான பெண்கள் கல்வியுடன் நெசவு. தும்பு, தையல் முதலிய தொழிற்பயிற்சிகள் பெற்று சுயமுயற்சியால் வாழவும், உணவு உற்பத்திக்கான கமத்தொழிற் பயிற்சிகளைப் பெறவும், உணவும் பொருட்களைத் தயாரித்து வினியோகிக்கவும், குடும்பக்கலை, வீட்டுப்பணி முதலிய மனையியல் துறைகளைப்பயிற்றவும் முக்கிய கவனமெடுப்பதோடு அனுதை வயோதிபப்பெண்கள் ஆறுதல் பெறவும் வகைசெய்யுமாம்.

பெண்கள் சுபிட்சத்துக்கு வழிகோலவிருக்கும் இந்த நிலையம் அமையவிருக்கும் காணியின்சுத்திகரிப்பு வேலைகளைத் தருமபுரம் கிராம முன்னேற்றச்சங்கமும், மாதர்சங்கமும் சிரமதானம் மூலம் செய்துள்ளன.

கஸ்தூரிபாய் நிலையத்தை அத்திபாரமிட்டு ஆரம்பித்து வைப்பதற்கு உலகசமாதான இயக்கத்தின் ஆசிய பிராந்தியத் தலைவரும், காந்தீய சர்வோதய இயக்கத் தளபதியுமான திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அழைக்கப்படவிருக்கிருர். (வி.நி.)

## விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்!

சங்கானை, சனி

சங்கானை, ஊர்காவற்றுறை, மல்லாவி, துணுக்காய், வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு முறையே செல்வி வி. முத்துப்பிள்ளை, திருவாளர்கள் எஸ். கணேஷ், எஸ். விவேகானந்தன், கே. கனகசபை ஆகியோர் விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## இ[illegible] நவாரமாகியும் [illegible]காணவில்லை

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த பி.சடாச்சர ஐயர் என்பவரைக் கடந்த இரு வார காலமாகக் காணவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் [illegible] அலுவலகம் ஒன்றில் [illegible] வந்தவர் எனத்தெரிகிறது.

# பெற்ருேர் கவலை

வேலணை, ஞாயிறு

வேலணையிலுள்ள 10 ஆரம்பப் பாடசாலைகளில் ஒரு சில தவிர ஏனையவற்றில் வருஷக்கணக்காக ஆங்கில ஆசிரியர்களில்லை.

ஆசிரிய கலாசாலைக்குச் சென்றவர்களினதும் விவசாயப் பயிற்சிக்குச் சென்றவர்களினதும் இடம் மாறிய இளைப்பாறியவர்களினதும் வெற்றிடங்கள் நிரப்பப்படாததினுல் இப்பகுதிப் பாடசாலைகளில் கல்வித்தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது பற்றித் தலைமை ஆசிரியர்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் கவனிக்காமல் இருப்பது குறித்து பெற்ருேர் கவலையடைந்துள்ளனர்.

## இடமாற்றம்

சாவகச்சேரி, ஞாயிறு

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் கடந்த மூன்று ஆண்டுகளாகக் கடமையாற்றிய டாக்டர் திரு. பி, சண்முகராசா இம்மாதம் முதல் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்குஇடமாற்றலானுர். இவரின் இடமாற்றம் குறித்து நேற்று மாலை சாவகச்சேரி டிரிபேர்க் கல்லூரியில் திரு. எஸ்.கே.திரவிய நாயகம் தலைமையில் ஒரு பிரிவுபசாரம் நடைபெற்றது. தென் மராட்சிக் காரியாதிகாரி திரு இ. சிதம்பரப்பிள்ளை உட்படப் பலர் டாக்டரின் சேவையைப் பாராட்டிப்பேசினர்.

## பொதுக் கிணறு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனைக் கிராமசபை சரவணை நாற்சந்திக்கருகாமையில் உள்ள மீன் சந்தைக்கு அருகாமையில் ஒரு பொதுக் கிணறு அமைப்பதற்கு முன் வந்துள்ளது.

## குழப்பம் விளைவித்தார்

### அபராதம் ரூபா 50

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வேலுப்பிள்ளை வைரவப்பிள்ளை என்பவர் குடிபோதையில் பருத்தித்துறை சந்தைக்குள் நின்று குழப்பம்செய்த குற்றத்திற்காக பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜாவால் 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## நாஸர் — ஹுசெயின் சந்திப்பு

கெயிரோ, ஒக். 1

ஜோர்தான் மன்னர் ஹுசெயின், நேற்று 9 மணித்தியால விஜயத்தில், கெயிரோ வந்து சேர்ந்தார். ஐ. அ. கு. ஜனுதிபதி நாஸருடன் அவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார்.

பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் நாடுகளுக்கு ஜோர்தான் மன்னர் செய்திருந்த விஜயங்கள்பற்றி இருவரும் பேசியதாகத் தெரிவிக்கப்பட்டது.

**ரஷ்யாவுக்கு**

மன்னர் ஹுசெயின், நாளை உத்தியோகபூர்வமான விஜயத்தில், சோவியத் ரஷ்யா செல்கிருர்.

<u>இந்தியா</u>

## கடல் எல்லையை விஸ்தரித்தது

புதுடில்லி, ஒக். 1

[illegible]ல் எல்லையை 6 மைலிலிருந்து 12 மைலுக்கு விஸ்தரித்துள்ளதாக இந்திய அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

# ''கர்வம் அழிவை ஏற்படுத்தும்''

பண்டத்தரிப்பு, ஞாயிறு

'கிராம அபிவிருத்திக்குமக்களின் சிரமதானம பெரிதும் தேவைப்படுகிறது. கர்வம், சர்வாதிகாரம் என்பன அழிவுக்கே வழிகாட்டும், மக்கள் கடமையுணர்ச்சியுடனும் பொது நோக்குடனும் ஐக்கியப்பட்டு உழைக்க வேண்டும்'' என சிறுவிழான் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கமும், சனசமூக நிலையமும் நடத்திய வருடாந்த பொதுக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

புதியநிர்வாகிகளாகப்பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. பொ. கீர்த்திசிங்கம், இணைக் காரியதரிசிகள்: திரு. நா. பாலசேகரம், க. இராசநாயகம், தனுதிகாரி: திரு. வ, கணபதிப்பிள்ளை. பதினெரு பேர்களைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## சட்ட மாணவர் இந்து மகாசபை

வெள்ளவத்தை. ஞாயிறு

கொழும்பு சட்டமாணவர் இந்துமகாசபையின் நடப்பு வருட நிர்வாகசபை உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. மு. திருநாவுககரசு, உபதலைவர் திரு. ச. நாகராஜா, பொதுச் செயலாளர் திரு. வ. க. நீலகண்டன். துணைச் செயலாளர் திரு. கா. சிவபாலன், பொருளாளர் திரு. க, கா. பத்மநாதன், பத்திராதிபர் திரு. விமல் சொக்கநாதன், கணக்காய்வாளர் திரு. ஆ ந. இராமச்சந்திரன். உத்தியோகப்பற்றற்ற குழு உறுப்பினர்கள்: திருமதி தே. பாலசுந்தரம், செல்வி மா. சபாரத்தினம்.

<u>நைஜீரியா</u>

## சமஷ்டி துருப்புகள் முன்னேறுகின்றன

லாகோஸ், ஒக். 1

நைஜீரிய சமஷ்டித்துருப்புகள், பிரிவினை 'பியாவ்ரா'வின் தலைநகரான எனுகுவின் எல்லைகளுக்கருகே சென்றுவிட்டதாகவும், 'பியாவ்ரா' மீதான இறுதித் தாக்குதல் ஒன்றுக்கு அவை தம்மைத் தயாராக்கிக்கொண்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்



யாழ்ப்பாணம் பட்டினம் வீரமாகாளி அம்மன் கோவிற்கு அருகே அம்மன்வீதியில் சில கட்டிடக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

தவணைமுறையில் பணம் செலுத்த வசதிசெய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது

யாழ்ப்பாணம் பட்டினம் ஆனைப்பந்தி, உப-தபால் கந்தோருக்கு அருகே சில கட்டிடக்காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு.

விபரங்கட்கு:

H. P. T.
64, கெய்சர் வீதி,
கொழும்பு.
அல்லது
யாழ்ப்பாணம் பிரதிநிதி
த. வடிவநாதன்
'' பூகண்ஸ் ''
71, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

காணிகள் வாங்குவதற்கும் விற்பதற்கும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவும். H. P. T. 64, கெய்சர் வீதி, கொழும்பு. அல்லது யாழ்ப்பாணம் பிரதிநிதி த.வடிவநாதன், பூகண்ஸ், 71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 264

## பழைய மாணவர் வெற்றி

அனுராதபுரம், ஞாயிறு

அனுராதபுரம் சென்- ஜோசேப்கல்லூரி மாணவர் கோஷ்டிக்கும் அதன் பழைய மாணவர் கோஷ்டிக்கு மிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பழைய மாணவர் கோஷ்டி வெற்றி பெற்றது பழைய மாணவர் 2 கோல்களும், தற்போதைய மாணவர் 1கோலும் போட்டனர். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் முன்னை நாள் அதிபரும் திருக்கோணமலை மேற்றிராணியாருமான அதிபரைதியோ குப்பிள்ளை விளையாட்டு வீரர்களைப் பாராட்டினர்.

## ''யாழ். இந்துமாணவர்க்கு பஸ் வசதிசெய்க''

உரும்பராய், ஞாயிறு

ஊரெழுவிலிருந்து உரும்பராய் ஊடாக யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரிவரை ஒரு பாடசாலை பஸ் சேவையை நடத்துவதன் மூலம் கோண்டாவில், திருநெல்வேலி, கந்தர்மடம் ஆகிய இடங்களிலுள்ள இக்கல்லூரி மாணவர்களின் போக்கு வரத்துக் கஷ்டங்களை நீக்குமாறு கோரி தமிழரசுக்கட்சி உரும்பராய்க் கிளைச்செயலாளர் இ.போ.ச. வடபிரதேச முகாமையாளரைக் கடித மூலம் கேட்டுள்ளார். மற்றைய பாடசாலைகளுக்கு நடைபெறும் பஸ் சேவையை உதாரணத்துக்குக் காட்டி உரும்பராய், ஊரெழு மாணவர்களால் மேற்படி முன்னணிக்கு அனுப்பப்பட்ட மகஜரொன்றும் கடிதத்துடன் சேர்த்து முகாமையாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.


மனோஹரா
[யாழ்ப்பாணம்]
Roger Hanin
Margaret Lee
in
AN ORCHID FOR A TIGER
A Secret Agent Film
in Color


## சென்.பற்றிக்ஸ் வெற்றி

குரும்பசிட்டி, ஞாயிறு

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வார இறுதியில் நடை பெற்ற சினேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியொன்றில் யூனியன் கல்லூரி வீரர்கள் 4-2 கோல்களால் யாழ்ப்பாண சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களிடம் தோல்வியுற்றனர். முதற்பிரிவு ஆட்டமான இப்போட்டிக்கு திரு. கே. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ்கோஷ்டி 4-0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு.ரி. தனபாலசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## புள்ளட்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னாகம் இளம்தென்றல் கோஷ்டிக்கும், உடுவில் புள்ளட்ஸ் கோஷ்டிக்கு மிடையில் நடை பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், உடுவில் புள்ளட்ஸ் கோஷ்டி 5-0 கோல்களால் வெற்றி யீட்டியது. வலி-காமம் வடக்குக் காரியாதிகாரியினுல் நடாத்தப் பட்ட இப் போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்றது. திரு. ஏ. முருகையா இப் போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்தார். [ந.நி]

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### திங்கள் 2-10-67

[செய்திகள்:-காலை 7-00. பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை, 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்—திருமதி கந்தையா.

இரவு 6-15 பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 விவேகச் சக்கரம், 7-45 பேச்சு-'மகாத்மா காந்தி'—கே. நேசையா, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கலைக் கோலம், 10-00 நேயர் விருப்பம்.

## சைக்கிள் ஓட்ட போட்டிமுடிவுகள்

காங்கேசன்துறை, ஞாயிறு

வலி-காமம் வடக்கு விளையாட்டு விழாவிற்கான சைக்கிள் ஓட்டப்போட்டி, மரதன் ஓட்டப்போட்டி காங்கேசன்துறைச் சந்தியில் ஆரம்பமாகி மருதனுமடம் சந்தியில் முடிவடைந்தது. போட்டிகளின் முடிவு வருமாறு:-

சைக்கிள் ஓட்டப்போட்டி எஸ்.கதிரவேல், ஏ. சுந்தரேசன், ரி.நவரத்தினம், மரதன் ஓட்டப்போட்டி:-சி. சாம்பசிவமூர்த்தி, வி. செல்வராஜா, என்.குலசிங்கம்.

வலி-காமம் வடக்கு விளையாட்டு உத்தியோகஸ்தர்கள் திரு.கே.கந்தசாமி, திரு. முருகையா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் காங்கேசன்துறைப் பொலிசார் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

## திருக்குறள் மனன போட்டியில் பரிசு

உடுப்பிட்டி, ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டியில் கரவெட்டி சிந்தாமணி விநாயகர் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த செல்வன் செ. வீரவாகு முதற் பரிசு பெற்றுள்ளார். இவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழையமாணவராவார். கோஷ்டி வாத்தியப் போட்டியில் கரவெட்டி கிழக்கு கனுவில் சனசமூக நிலையம் முதலிடத்தையும், நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது.

## கிராமசேவையாளர் சங்கக்கூட்டம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

யாழ்.மாவட்ட கிராம சேவையாளர் சங்க 4-வது ஆண்டுப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் கிறிஸ்தவ வாலிபர் மண்டபத்தில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கே. இராமச்சந்திரா [அல்வாய் தெற்குகிராமசேவையாளர்] உப தலைவர்கள் திரு. எஸ். சோமசுந்தரம், திரு. எஸ். மகாலிங்கம், காரியதரிசி திரு. கே. துரைசிங்கம், உப காரியதரிசிகள் கமலநாதன், திரு. எஸ். சின்னத்தம்பி, தனதிகாரி திரு. கே. சண்முகராசா.

## வரிவிளம்பரம

### தேவை

மனேஜர்

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபலமான படமாளிகை ஒன்றில் கடமையாற்ற அனுபவமுள்ளமனேஜர் தேவை. ஆங்கிலம் நன்கு தெரிந்தவராகவும், பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல்வேண்டும்.- விரும்புவோர் 5-10-67 க்கு முன் விளம்பர இல. 2394 மே/பா 'ஈழநாடு', த.பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்றவிலாசத்திற்குஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2394

### விற்பனைக்கு

காணி:

புதுக்குடியிருப்பு யாழ்ப்பாணம் பஸ்ரூட்டுக்கு அருகாமையில் குளத்தினுல் தண்ணீர்பாய்ச்சக்கூடிய 8 ஏக்கர் உறுதிக்காணி விற்பனைக்கு உண்டு. 8-10-67 க்கு முன் கடிதமூலம்தொடர்புகொள்ளவும். கு. சிதம்பரநாதன் மானிப்பாய் மேற்கு, மானிப்பாய். 2211

### வாடகைக்கு

வீடு

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் (தட்டாதெரு) வீடு, (எல்லா வசதிகளுடன்) வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: எஸ். கே. சேனுதிராசா, சேனுதிராசா நகைமாளிகை, கொக்குவில் கிழக்கு. 2207

### தேவை

மஸ்கேலியா பகுதிக்கு R. M. P. அல்லது இளைப்பாறிய அப்போதிக்கரி தேவை. இலகுவான வேலை. வசதிகள் செய்துகொடுக்கப்படும். மனுச்செய்க:-S. K. நாதன் பிரதான வீதி, மஸ்கெலியா. 2204

## பாலத்தில் வெடிப்பு

குரும்பசிட்டி, ஞாயிறு

பொது மராமத்து இலாகாவினுல் தெல்லிப்பளை சந்தியில் அண்மையில் புதிதாக திருத்தம் செய்யப்பட்ட பாலத்தில் வெடிப்புத் தோன்றியுள்ளதால் போக்குவரத்து வாகனங்களுக்கு விபத்துக்கள் விளைவிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.


2-வது ஜனத்திரள் வாரம்!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ண [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
இன்று முதல்!
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
ராஜ் [நீர்கொழும்பு]
மற்றும் 4 திரைகளில்!
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி ஜனதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும் பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!
ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்



ஜமுனு - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
குழந்தையும் தெய்வமும்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்



ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
THE SPY WHO CAME IN FROM THE COLD

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெமினி சரோஜாதேவி நடித்த
வாழவைத்த தெய்வம்

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m. 9-45 p. m.
Ian Hendry
Janette Scott
in
THE BEAUTY JUNGLE



ராதா மணிமார்க்
சந்தனுதித் தைலம்
கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.
தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனுல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.
எங்கும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)
ஏகவிநியோகஸ்தர்கள்:-
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
[மருந்து, மருந்துச்சரக்கு வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]
53, கே. கே எஸ். ரேட். பெரியகடை, யாழ்ப்பாணம் — ''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 10 செனட்டர்கள் பதவி 12-ம் திகதி முடிகின்றது

## அரசாங்க, எதிர்க்கட்சிகள் சுறுசுறுப்பு

கொழும்பு, ஞாயிறு

செனட்சபையின் 10 அங்கத்தவர்களுடைய பதவிக் காலம் இம்மாதம் 12-ந் திகதியுடன் முடிவடைகின்றது.

பிரதமருக்குள்ள அதிகாரத்தின் கீழ் அவர் ஐந்து புதிய செனட்டர்களையும், எதிர்க்கட்சியினர் இரு செனட்டர்களையும் அரசாங்க பாராளுமன்றக் குழுவினர் மூன்று செனட்டர்களையும் தெரிவு செய்யலாம் என்பது தெரிந்ததே.

பின்வரும் செனட்டர்களுடைய பதவிக்காலம் இம்மாதம் 12-ந் திகதியுடன் முடிவடைகின்றது. டாக்டர் எம்.பி.பி.பீரிஸ், திருவாளர்கள் ஏ. பி. ஜெயசூரியா, எஸ்.டி. எஸ். சோமரத்ன, வி ரி.விமயிரத்தின,ஐ. கார்ணகொட. ஆனந்தத சநாயக்காஜி.பி. விக்கிமாராட்சி சி. டி. எஸ். சிறிவர்த்தன, மசூர் மௌலானா, டாக்டர் ஐ.செனநாயகா.

தமிழரசுக்கட்சி சார்பில் நியமிக்கப்பட்ட திரு. மசூர் மௌலானாவின் பதவிக் காலம் இம்மாதம் 12-ந் திகதியுடன் முடிவடைவதால் இவர் கல்முனைத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடநிறுத்தப் படலாமெனத்தெரிய வருகிறது.

அரசாங்கத்தினால் டாக்டர் எம். பி.பி. பீரிஸ்மீண்டும் நியமிக்கப்படலாமெனவும் தமிழரசுக் கட்சியின் சார்பில் செனட்சபைக்கு நியமிக்கப்படவிருக்கும் பிரமுகர் பற்றி இவ்வார இறுதியில் யாழ்ப்பாணத்தில்நடைபெறவிருக்கும் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்படுமெனவும் தெரியவருகிறது.

தமிழ்க் காங்கிரஸ் சார்பில் செனட்சபைக்கு ஒருவர் நியமிக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர் பிரதமரை வற்புறுத்திக் கேட்கவிருக்கின்றார். காங்கிரஸ் சார்பில் திரு.ரி. சங்கரப்பிள்ளையின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

## கோப்பாயில் 600 பேர் காசநோயாளர்

### நிவாரண சங்க செயலாளர் தகவல்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் சுகாதாரப் பகுதியில் கயரோக நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை சுமார் அறுநூறாகும். இவர்கள் இந் நோயிலிருந்து குணமடைவதற்காக இலங்கை கயரோக நிவாரண தேசீய சங்கத்தின் கோப்பாய் சுகாதாரக் கிளை தொண்டு புரிந்து வருகின்றது என இச்சங்கத்தின் செயலாளர் திரு. க. இராசரத்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நோயுற்றவர்களைக் குணப்படுத்தலும், இந் நோயை மேலும் பரவாமல் தடுத்தலுமே இச் சங்கத்தின் நோக்கமாகும். இந்நோக்கம் கைகூடப் பொதுசனங்களும் அரசாங்கமும் இணைந்து தொழிற்படும் நிலைமை வளரவேண்டும்.

நோயாளிகள் பிரயாணக் கஷ்டத்துக்குள்ளாகாமல் தாம் வசிக்கும் பகுதிகளிலேயே சிகிச்சைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப் பகுதியில் தற்பொழுது கிழமைக்குஇரு தடவை மருந்துகொடுக்கப் பட்டுவருகிறது.

கிரமமாகச் சிகிச்சை பெறும் பொருட்டுநோயாளிகளுக்கு வழி காட்டுவதற்காக ஒரு முழுநேர அமைப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளார். கிராமத்துக்கு பத்துத் தொண்டர்கள் வீதம் தொண்டர் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந் நோயால் வருந்தும் எல்லோரையுங் கண்டுபிடித்துத் திறமான சிகிச்சை பெறச்செய்தும், நல்லுணவு கொள்ளப்பண்ணியும், நல்ல யோசனைகள் கூறியும் உதவிபுரிவது தொண்டர்களின் தலையாய கடனாகும்.

பரம்பரை நோயல்லாத தொற்று நோயே என்று கண்டுபிடிக்கப்பட்டு, மாற்ற முடியாதென்றிருந்த நிலை மாறிக் கயரோகக் கிருமியை அடியோடு நாசமாக்கும் புதிய மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டு கிழமைக்கு இரண்டுதரம் சிகிச்சை செய்யும் முறை கையாளப்பட்டதனால் பாரதநாட்டில் 98 வீத வெற்றியும் கண்டிருக்கும் இந்நாளில் இதற்கென ஏராளமான பணத்தை உலகில் வேறெங்கிலுமில்லாத வகையில் அதிகமாகச் செலவிடும் ஈழநாட்டில் இந் நோயை பரவ நாம் இடமளிக்கலாமா?

'நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்' ஆதலால் ஒவ்வொருவரும் இச் செல்வத்தை அனுபவிக்கும்வகையில் உதவிபுரிய எல்லோரும் முன்வருதல் வேண்டும். பொதுமக்களும் பள்ளிக் கூடங்களும், புதினப் பத்திரிகைகளும் ஏனைய நிறுவனங்களும் இச்சங்கத் [illegible] திரு. இராசரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அடுத்த போயா தினங்கள்

அக்டோபர் 3 செவ்வாய்
அக்டோபர் 11 புதன்
அக்டோபர் 18 புதன்
அக்டோபர் 25 புதன்

## சீனாவை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வருடங்களுக்கு முன் சீன பஞ்சத்தால் அவதிப்பட்டது ஆனால் அது முன்னேறி, தனக்குத் தேவையான அரிசியை உற்பத்திசெய்வதோடு, வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறது. இலங்கைக்கும்கூட தக்க சமயத்தில் கைகொடுத்தது சீனாவே. இலங்கை-சீன அரசாங்கங்களுக்கு இடையில் கசப்பான முறையில் தொடர்பு இருந்தாலும், சீன மக்கள், இலங்கை மக்களுடன் நட்புறவை வளர்க்கவே விரும்புகிறார்கள்'' என்றார்.

திருவாளர்கள் எஸ். இராசா, கே. ஏ. சுப்பிரமணியம் உட்படப் பலரும் பேசினர். [ந. நி.]

## மனிதகுலம்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

படும். அரசியல், மதத்திற்கு இணக்கமாகவே இருக்கின்றது. மதச்சார்பற்ற அரசியலானது ஆன்மாவைக் கொல்ல அது ஒரு சாவுக் கிடங்கிற்கு ஒப்பாகும்' என்பது அவரது சுயசரிதையில் ஒருபகுதி.

இறைவன் உன்னதமான முக்கியத்துவமும் சிறப்பான உண்மையும் வாய்ந்தவர் எனக் கடவுளைப் பற்றிக் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை காந்தியைப் புதுமனிதராக உருவாக்கியது. காந்தியின் மனத்தினைச் சந்தேகங்கள் குழப்பும்போது அவர் சந்தேகங்களை இறைவனுக்கே விட்டுவிடுவார்.

காந்தியடிகள் பாரதநாட்டில் பல திட்டங்களை நிறைவேற்ற ஆவல்கொண்டார். இந்திய மக்கள் சகோதரர்களாய் ஒருமைப்பாட்டுடன் வாழவும், பாரத மக்கள் தம்மையே தமக்குத் துணையென உழைப்பாளிகளாய் வாழவும், பெண்களை ஆண்களுக்குச் சரிநிகராக அரசியல் பொருளாதாரம் சமூகத் துறையில் மேன்மையடையச் செய்யவும், தீண்டாமையை அகற்றி இந்து மதத்தினைத் தூய்மையாக்கவும் அவர் பாடுபட்டார். இத்தகைய செயற்கரிய செயல்களால் மகாத்மா இன்று உலக மக்கள் உள்ளத்தில் நிலையான இடத்தைப் பெற்றுவிட்டார்.

—பூரணி

## மின்சார நிலைய வளவில் வெளிநோயாளர் நிலையம்

### ஜி. ஜி.-கமிஷனர் பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், திங்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்படவிருக்கும் நவீன வெளிநோயாளர் சிகிச்சை நிலையக் கட்டிடத்திற்காக, யாழ்ப்பாண மின்சார நிலையக் காணியில் அரைவாசி மாத்திரம் வழங்கப்படும். இத்தகவலை யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. நடேசன் யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றுக் காலை, திரு. ஜி ஜி பொன்னம்பலம் மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. நடேசன், ஆணையாளர் திரு. ஹட்சன் செல்வராசா, என்ஜினியர் திரு. வைத்திலிங்கம் ஆகியோரைச் சந்தித்துச் சுமார் 2 மணி நேரம் அளவளாவினார். புதிய வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தை இன்னும் 18 மாதங்களில் நிறுவ சுகாதார அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவது பற்றியும் இங்கு பிரஸ்தாபிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்சப்படவிருக்கும் தொழில் முறைப் பயிற்சி நிலையத்தை குருநகர், பண்ணை அல்லது கொழும்புத்துறை ஆகிய இடங்களில் ஒன்றைத் தெரிவு செய்து நிறுவுவது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது. கரையூர் குடியேற்றத் திட்டம், கொழும்புத்துறை குடிநீர்த் திட்டம் ஆகியவற்றை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டிய அவசியம் பற்றியும் திரு. பொன்னம்பலம் இங்கு வலியுறுத்தினார். [ந. நி.]

## முதலாம் எதிரிக்கு .....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூடாது என்பதற்கு ஏதாவது காரணம் காட்டமுடியுமா?'' என்று கேட்டார். அப்போது முதலாம் எதிரி தான் இந்தக் கொலையைச் செய்யவில்லையென்று தெரிவித்தார்.

நீதியரசர் முதலாம் எதிரிக்கு மரணதண்டனை விதித்த பின்னர் இம் மரண தண்டனை இவ் வருடம் கார்த்திகை மாதம் 7-ம் திகதி செவ்வாய்க் கிழமை கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்தார்.

முதலாம் எதிரி சார்பில் அட்வகேட் ஏட்லி பெரேரா புறக்டர் ஏ. செல்லத்துரையின் அனுசரணையுடனும், இரண்டாம் எதிரி சார்பில் அட்வகேட் அரசுவால்டன் புரக்டர்கள் ஆர். விசுவநாதன், ஸி. பரமசிவம் பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடனும், மூன்றும் எதிரி சார்பில், எதிரிகளுக்காக ஆஜரான அட்வகேட் தேவசகாயமும் ஆஜராகியிருந்தார்கள். தீர்ப்பை அறிய நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் திரண்டிருந்தார்கள். [ந.நி.]

## சதி வழக்கு

கொழும்பு, ஞாயிறு

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதிசெய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 22 சந்தேக நபர்களையும் விசாரிக்க விசேஷ ஜூரர் சபை நியமிக்கவேண்டும் என்று அட்டோர்னி ஜெனரல் தாக்கல் செய்துள்ள மனு இன்று 'பிரதம நீதியரசர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள்மீதும் பிரதம நீதியரசர் 'நோட்டீஸ்' பிறப்பித்து விசாரணையை 12-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சந்தேக நபர்கள் தாம் சிங்களம் பேசும் ஜூரர்கள் முன் விசாரிக்கப்படவேண்டுமென்று தெரிவித்துள்ளனர்.

## 13015 பேர் இந்தியர்களாக பதிவு

கொழும்பு, ஞாயிறு

கடந்த மாதம் இந்தியவம்சாவழியினரான நாடற்ற மக்களில் 794 பேர் இந்திய பிரஜைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

1964 அக்டோபர் மாதம் முதல் இதுவரை மொத்தம் 13015 பேர் இந்திய பிரஜைகளாக பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இத் தகவலை இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷன் வெளியிட்டுள்ளது.

## இன்று

சுழிபுரம், திங்.

வழக்கம்பரை ஸ்ரீ அம்பாள் நாடக மன்றத்தினர் 'அழாதவர்கள் யார்?' என்னும் சமூக நாடகத்தை சுழிபுரம் கிராமசபை திறந்தவெளியரங்கில் இன்று இரவு 7 மணிக்கு மேடையேற்றுகின்றனர்,

சித்தன்கேணி மாதர் முன்னேற்றச் சங்க மகளிர் இன்று மாலை 6 மணிக்கு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மண்டபத்தில் 'சீதனம்' என்ற நாடகத்தை நடாத்துகின்றனர். யாழ். அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா நாடகத்திற்கு தலைமை தாங்குகிறார்.

## சீனாவின்...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

கொள்ளவில்லை. தலைவர் மா-சே-துங், பிரதமர் சூ-என்-லாய், திரு. லிம்பியா ஆகியவர்கள் கலந்து கொண்டார்கள்,

இந்த விழாவையொட்டி பீகிங்கில் மிகப்பெரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் திரு. லிம்பியா பேசும்போது தலைவர் மா-சே-துங்கிற்கு எதிராக உள்ள சக்திகளை ஒழிக்க வேண்டுமென்றும், மாவோ ஆரம்பித்துள்ள கலாசாரப் புரட்சி தொடர்ந்து நடைபெறவேண்டும் என்றும் கூறினார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் [illegible] தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org